**தலைப்பு 203 - கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 203 - கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 நவம்பர் 20 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடுதல், அமுல்ப்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 176.37 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 159.74 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 16.63 மில்லியன் அதாவது 9.43 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 152.27 | 137.91 | 14.36 | 9.43 |
| மூலதனம் | 24.10 | 21.83 | 2.27 | 9.42 |
| **மொத்தம்** | **176.37** | **159.74** | **16.63** | **9.43** |

===== ===== ====

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 20301 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 2.00 | 1.99 | 0.70 | 0.96 | 6.50 | 3.92 |

## 2.3 கணக்காய்வு அவதானிப்பு

கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களிற்கு உட்பட்டுத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

### பாதீட்டு முரண்கள்

03 செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டமையினால் நிதியேற்பாடுகளை பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது அந்த செலவின விடயங்களிற்குரிய தேறிய நிதியேற்பாடுகளில் 33 சதவீதம் முதல் 88 சதவீதம் வரையிலான வீச்சளவில் காணப்பட்டன.

## 3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

20301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்தினத்தில் அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 40,178 ஆனதுடன் அந்நிலுவை மீதிகளில் ரூபா 20,000 ஆனது 2017 ஆம் ஆண்டில் அறவிடப்பட்டிருந்தது. மேலும் அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 20,178 ஆக இருந்தது.

## 3.3 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.3.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் ஒவ்வொரு செலவின விடயத்தின் கீழேயுள்ள நிதிப் பெறுமதிகள் தவிர நலன்களைப் பெறுகின்ற தேவாலயங்கள், தேவஸ்தானங்கள், மறைமாவட்டங்களில் செயற்படுத்தப்படும்

நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் நலன்களை பெறுகின்ற அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் எண்ணிக்கை போன்ற எண் ரீதியான பெறுமதிகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இதனால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த செயலாற்றல் அறிக்கை ஊடாக ஒப்பிடக்கூடிய தகவல்களை பெறமுடியாதிருந்தது.

### 3.3.2 உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்தினால் 2016 ஆம் ஆண்டிற்காக 3 பிரிவுகளின் கீழ் 27 விடயங்களை மேவுகைசெய்யும் வகையில் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2009 யூன் 09 ஆம் திகதிய டிஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.4 செயலாற்றல்

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்**

**கிறிஸ்தவ இலக்கிய விழா**

2016 ஆம் ஆண்டின் கிறிஸ்தவ இலக்கிய விழாவில் ஆயர் இல்லம் மற்றும் மறைமாவட்ட நாடகப் போட்டிகளிற்காக 11 மறைமாவட்டங்களிற்கு ரூபா 1,020,964 கூட்டுமொத்தத் தொகை வழங்கப்பட்டிருந்தது. கிறிஸ்தவ இலக்கிய விழாவில் போட்டி நடுவர்களிற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது ஒவ்வொரு மறைமாவட்டத்திற்கும் வெவ்வேறு அளவுகளில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் போட்டி நடுவர்களிற்கு கொடுப்பனவு செய்யும் போது பொதுவான இணக்கப்பாடொன்றிற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 03 | 02 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | - | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 55 | 35 | 20 |
| (iv) | ஆரம்ப நிலை | 07 | 04 | 03 |
| | **மொத்தம்** | **66** | **41** | **25** |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் மொத்த எண்ணிக்கை 66 ஆன போதிலும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேவையில் ஈடுபடுத்தப்பட்ட பதவியணியினர் 41 ஆக இருந்தது. அதன் பிரகாரம், 25 ஊழியர்களின் வெற்றிடங்கள் அவதானிக்கப்பட்டன. 04 வருடங்களாக கணக்காளர் பதவி வெற்றிடமாக காணப்பட்டதுடன் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து நிர்வாக உத்தியோகத்தர் பதவி வெற்றிடமாக இருந்தது.